
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1030**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

90

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

## கோடைமழையில், பாய்ந்த கொள்கை மழை!

திமுகழக திருச்சி மாவட்ட இரண்டாவது மாநாடு 1953-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25 மற்றும் 26 தேதிகளில் லால்குடியில் நடைபெற்றது. முதல் நாள் காலையில், சிறுதையூரில் இருந்து தலைவர்கள் ஊர்வலமாக மாநாட்டுப் பந்தலுக்கு அழைத்து வரப்பட்டனர். முடிகொண்டான் முனுசாமியின் திராவிடப் பண்ணுடன் மாநாடு தொடங்கியது. “பொதுச் சேவையில் 50 ஆண்டுகளை ஓட்டிவிட்டேன். என் வாழ்நாளில் இப்படிப்பட்ட சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்ததில்லை. இப்போது நான் பேச வரவில்லை. இளையோர்களாகிய நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் இனி? பேசியது போதும்... காரியமாற்ற முனையுங்கள்” என சீர்திருத்த மாநாட்டைத் தொடங்கிவைத்து எழுச்சி உரை நிகழ்த்தினார் மூவலூர் இராமமிர்தத்தம்மையார்.

அன்பில் தர்மலிங்கம் வரவேற்புரையாற்றினார். அடுத்து, கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் குழுவினரின் வில்லுப்பாட்டு நடைபெற்றது. நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.இராமசாமி மாநாட்டுக் கலைக் கண்காட்சியைத் திறந்துவைத்தார். சீர்திருத்த மாநாட்டுக்குத் தலைமை வகித்த பொன்னம்பலனார், பேராசிரியர் க.அன்பழகன், என்.வி.நடராசன் அடுத்தடுத்து சொற்பொழிவாற்றினர். மாலை யில் தில்லைவில்லாளன், டி.கே.தாமரைச் செல்வன், அருண்மொழி, எஸ்.கே.சாமி, சத்தியவாணி முத்து, நாவலர் நெடுஞ்செழியன் ஆகியோர் தனித்தனி தலைப்புகளில் உரையாற்றினர். ‘காதல்




ஓவியம் : சிகரன்

ஜோதி’ நாடகத்துடன் முதல் நாள் நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

இரண்டாம் நாள் காலையில் நாகூர் ஹனிபாவின் இன்னிசையுடன் அரசியல் மாநாடு தொடங்கியது. கே.ஏ.மதியழகன் தொடங்கிவைத்தார். ஈ.வி.கே.சம்பத் தலைமை வகித்தார். பிற்பகலில் உரையாற்றிய எம்.ஜி.ஆர்., “தி.மு.க.வைத் தவிர கலைஞர்கள் வாழ்க்கையைச் செப்பனிட முயலும் இயக்கத்தை நான் கண்டதில்லை. அண்ணாவின் தலைமையில் இயங்கும் தி.மு.க.வின் அறிவுப் பணிக்கு கேரளப் பகுதியைச் சார்ந்த நான் என்னால் இயன்றவரை பாடுபடுவேன்” என்றார். தன்னை உலகுக்கு அறிமுகம் செய்துவைத்தது அண்ணாதான் என்று உணர்ச்சிபொங்க தனது உரையைத் தொடங்கிய சிவாஜி கணேசன், “அறிவியக்கம் எங்களுடைய இருதயமாகும். இதற்காக எமது உடல் பொருள் ஆவி அனைத்தையும் தரத் தயாராக இருக்கிறோம். உரிமைபெற, திராவிட நாடு பெற என் போன்றோர் எப்போதும் தயார்” என்று ஆவேசமாகப் பேசினார்.

ஆசைத்தம்பி, என்.எஸ்.இளங்கோ, எ.கே.வேலன் ஆகியோர் அடைமழையாய் சொற்பொழிவாற்றினர். அப்போது கோடை மழை குறுக்கிட்டது. மழையைத் தாங்கும் அளவுக்கு பந்தல் பலமாக இல்லை. 8 மணிவரை மாநாட்டை ஒத்திவைப்பதாக அறிவித்தனர். ஆனால் தொண்டர்களோ, ‘இல்லை வேண்டாம்... தொடர்ந்து நடத்துங்கள்’ என கூட்டமாக பதிலளித்தனர். சேறும் சகதியுமாய் பந்தலுக்குள் அமரவே முடியாத நிலை. அதையும் மீறி, அமர்ந்து பார்க்கவும் இயலாத அளவுக்கு கூட்டம் நிரம்பி வழிந்தது. கோடை மழையோடு கொள்கை மழையும் பாய்ந்தது.

விவசாயிகள், நெசவாளர்களின் துயர் துடைக்கும் கோரிக்கைகள் அடங்கிய 11 தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப் பட்டன. குறிப்பாக, டால்மியாபுரத்தை ‘கல்லக்குடி’ எனப்பெயர் மாற்றக்கோரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்பிறகு கலைஞர், நாவலரின் உரைவீச்சுகள் நடை பெற்றன. இறுதியாக மழை பெய்துகொண்டு இருந்தபோதே உரையாற்றத் தொடங்கிய அண்ணா, “டால்மியாபுரம் பெயர் மாற்றும் தீர்மானம் செய்யப்பட்டுவிட்டது. இந்தப் பெயர் தமிழ்நாட்டின் அவமானச் சின்னமாக விளங்குகிறது. இதனை மாற்ற போராட்டம் நடத்தியே தீருவோம். இந்தப் போராட்டத்திற்கு தமிழ்நாட்டு மக்கள் ஆதரவளிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு’’ என்று கல்லக்குடி காண, கலகக்குரல் எழுப்பினார்.

அந்த கலகக்குரலோடு மாநாடு கலைந்தது.

**...கூட்டம் திரளும்**

## தொழிலாளர்களுக்கு எதிராகும் தொழிலாளர் சட்டங்கள்!

ஒன்றிய பா.ஜ.க. அரசு சமீபத்தில் நான்கு தொழிலாளர் சட்டங்களை நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது. ஏற்கெனவே நடைமுறையில் இருந்த 29 சட்டங்களுக்கு மாற்றாக புதிய சட்டங்களைக் கொண்டு வந்துள்ளதாக அறிவித்துள்ளது. ஆனால், இந்த சட்டத் தொகுப்புகள் தொழிலாளர்களின் உரிமைகளைப் பறிக்கும் வகையில் உள்ளதாக, தொழிற்சங்கங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன.

இந்த நான்கு சட்டத் தொகுப்புகளும் தொழிலாளர்களின் பணிப்பாதுகாப்பை மறுக்கும் வகையில் உள்ளது. குறிப்பாக, கடும் போராட்டத்தினால் பெறப்பட்ட 29 தொழிலாளர் சட்டங்களை ஒழித்துக்கட்டும் செயல் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

தொழிற்சாலைகளின் வேலைநேரத்தை 9 முதல் 12 மணி நேரமாகவும், கடைகள் மற்றும் நிறுவனங்களின் வேலை நேரத்தை 9 மணி முதல் 10 மணி நேரமாகவும் புதிய சட்டத்தொகுப்பு அதிகரித்துள்ளது. தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடினால், அதை கிரிமினல் குற்றமாகக் கருதலாம் என்றும் புதிய சட்டத் தொகுப்புகள் தெரிவிக்கின்றன. இதனால், தொழிலாளர்களின் உரிமைக்குரல் பறிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

சட்டங்களை எளிமைப்படுத்துவதற்குப் பதிலாக, புதிய சட்டத் தொகுப்புகள், தொழிலாளர்கள் இதுநாள் வரை பெற்று வந்த பல உரிமைகளை நீர்த்துப்போகச் செய்யவும், ஒழித்துக்கட்டவும் முற்படுகின்றன.

சுதந்திரத்துக்குப் பின்னர், 1950-ஆம் ஆண்டு வரை உருவாக்கப்பட்ட சட்டங்கள் என்பதால் மாற்றுகிறோம் என கூறியுள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு. பழைய சட்டங்களுக்கு மாற்றாக, புதிய சட்டங்கள் என அரசியலமைப்பின் ஒவ்வொரு கூறாக உடைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஜனநாயகத்தின் மீதான இந்தத் தாக்குதலை நாடு முறியடிக்கும்.

## ப்ளாஷ்பேக்





சி.தர்மராஜ்

### தலைவரிடம் பிறந்தநாள் வாழ்த்து!

2012-ஆம் ஆண்டு, அக்டோபர் 10-ஆம் தேதி எனது பிறந்தநாளை முன்னிட்டு, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை சந்தித்து, பிறந்த நாள் வாழ்த்துப் பெற்றேன். கழக வளர்ச்சி நிதி அளித்து புகைப்படம் எடுத்து மகிழ்ந்தேன். தலைவரிடம் ஆசி பெற்றதை, இன்றளவும் நினைத்து பெருமை கொள்கிறேன்.

**– சி.தர்மராஜ், முகநூல் இணையதள செயல்வீரர், தாம்பரம் சட்டமன்றத் தொகுதி, காஞ்சிபுரம் வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்


90

**சுயமரியாதை-சமத்துவம்- சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## காணாமலாக்கப்பட்டவர்கள்...

ஒரு குடியரசு தன்னுடைய குடிமக்களை கொன்றும் உயிருடனும் குழியில் புதைத்த கோரம் தமிழ்நாட்டிற்கு தென்கிழக்கே கண்ணீர் துளி போலுள்ள இலங்கையில் நிகழ்ந்தேறியது. இது புனைவல்ல, நீதிக்கு ஏங்கி மண்ணில் புதைந்து கிடக்கும் மெய். புலிகளின் அரணாக திகழ்ந்த யாழ் கோட்டையைக் கைப்பற்ற இலங்கை முப்படை முயன்றபோது, கடல் வழியாக லைடன்தீவையும்- மண்டைதீவையும் கடக்க வேண்டியிருந்தது. அந்த வழியில் இருந்த உயிர்கள் துப்பாக்கிக்கும், பிற போர் ஆயுதங்களுக்கும் இரையாகின. சிறார்களும் இளைஞர்களுமாக 72 பேர் இலங்கை இராணுவத்தால் காணாமலாக்கப் பட்டனர்.

1990-இல் நடந்த இப்படுகொலைகள் குறித்து, அப்போது யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியான ‘உதயன்’, ‘முரசொலி’ ஆகிய பத்திரிகைகள் அதிக அளவிலான செய்திகளை வெளியிட்டுள்ளன. காலம் அடித்துச் சென்ற இந்தப் படுகொலைகளுக்கு நீதி வேண்டி 35 ஆண்டுகள் கழித்து ஒரு ஆவணத்தை உருவாக்கியுள்ளார் எழுத்தாளர் ஷோபா சக்தி. ‘1990: லைடன்தீவு-மண்டைதீவு படுகொலைகளும் புதைகுழிகளும்’ என்ற இந்நூலை கறுப்புப் பிரதிகள் பதிப்பகம் வெளியிட்டுள்ளது.




படுகொலையின் விளிம்பில் இருந்து மீண்ட வாய்மொழி சாட்சியங்கள், அரிதாக காண கிடைக்கும் அறிக்கைகள், அதனினும் அரிதான பத்திரிகை-இணையதள செய்திகளைக் கொண்டு, இந்த 144 பக்க நூலை எழுதி இருக்கிறார். இந்நூலின் நோக்கம் இப்படுகொலைகளுக்கு இலங்கை அரசு பொறுப்பேற்பதும், நீதி வழங்குவதுமே. அவையே சமாதானத்தையும் பகை மறப்பையும் உண்டாக்கும். அது மட்டுமல்லாது காணாமலாக்கப்பட்ட 72 உயிர்களின் உண்மை நிலை பற்றி அறிய வேண்டும் என்பதற்காக, இலங்கை அரசு வழங்கும் இழப்பீட்டுத் தொகையைக் கூட பெறாமல் காத்திருக்கும் அவ்வுயிர்களின் உறவுகளுக்கு ஒரு ஆறுதலை இந்த படுகொலைக்கான நீதி நிச்சயம் வழங்கும்.

வெடிகுண்டுகளின் கந்தக நாற்றத்தை விட அழுகிக்கிடந்த உடல்களில் இருந்து வீசும் நாற்றம் ஒரு தீவைச் சூழ்ந்துள்ள காட்சியை நினைக்கவே கண்ணீர் ததும்புகிறது. வெள்ளைக் கொடியேந்தி தேவாலயத்தில் ஓலம் எழுப்பி கூடி நின்றபோதும், கண்ணி வெடிகளை எதிர்கொள்ள கால்நடையாக சொந்த குடிமக்களை இலங்கை ராணுவம் பயன்படுத்திய அவலமும் இங்குதான் நடந்தேறின. அனைத்திற்கும் உச்சமாக இவர்களில் எஞ்சிய 72 பேர் கைது செய்யப்பட்டு கிணறுகளிலும், புதைகுழிகளிலும் உயிருடனும் சடலமாகவும் புதைக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டதுதான். ராணுவம் நிகழ்த்திய வதையைச் சொற்களாக படிக்கப் படிக்க அச்சம் மேலெழுகிறது.

நமக்கு அருகிலிருக்கும் இலங்கையில் 35 ஆண்டுகளுக்கு முன் இப்படியான வன்செயல்கள் நடைபெற்றதா என்பதை எண்ணிப் பார்க்கவே, உடல் நடுங்குகிறது. தமிழர்களாக மட்டுமின்றி, மனிதர்களாக நாம் நீதி விசாரணை வேண்டி ஒற்றைக்குரலில் முழங்க வேண்டிய தருணமிது.

இந்த நூலின் அட்டைப்படத்தில் இருக்கும் சிறார்களும்-இளைஞர்களும், புத்தகத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் முகம் தெரியாமல் பெயராக மட்டும் எஞ்சி நிற்கும் காணாமலாக்கப்பட்டவர்களின் உடல்கள் புதைகுழியில் அந்த நீதிக்காகத்தான் ஏங்கிக் கொண்டிருக்கும்.

**...வாசிப்போம்.**

## ம.ஞ.வ. வூருக

### மாநிலங்களவைக்கு அண்ணா!

1962 ஆம் ஆண்டு மார்ச் 4-ஆம் தேதி, கழகத்தின் சார்பில் வெற்றிபெற்ற சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் நடைபெற்றது. சட்டமன்றத் தலைவராக நாவலர், துணைத் தலைவராக கலைஞர், நாடாளுமன்றத் தலைவராக நாஞ்சில்.கி.மனோகரன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பேரறிஞர் அண்ணா, மாநிலங்களவை உறுப்பினராக வேண்டும் என அத்தனை உறுப்பினர்களும் வேண்டுகோள் வைத்தனர்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.